Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 322/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ராஜேஷ் |
| Father's Name | – | தங்கவேல் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 21st June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மகாலிங்கபுரத்தில் குடியிருந்து கொண்டு கேடிஎம் ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்துள்ளேன். எனது தாயார் பெயர் புஷ்பம். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய உடல்நலம் இல்லாத என் தாயாரை பார்த்து கொள்வதற்காக தாய் கன்சல்டங்ஸ் மூலமாக ஆஜர் எதிரியை என் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தேன்.

07.01.2019 ம் தேதி வேலைக்கு சேர்த்தேன். வேலைக்கு சேர்த்த இரண்டு நாட்களில் எனது தாயாரை கவனித்து கொண்டிருந்த ஆஜர் எதிரி 09.01.2019 ம் தேதி இரவு காணாமல் போய்விட்டார். அக்கம் பக்கம் விசாரித்தேன். என்னுடைய தாயாரின் 16 பவுன் செயின் காணாமல் போயிருந்தது. காலையில் விசாரித்து பார்த்தபோது என் தாயார் தூங்கி கொண்டிருப்பார் என்று நினைத்தேன். என் தாயாருக்கு தூக்க மாத்திரை போன்று ஏதோ கொடுத்து ஆஜர் எதிரி நகையுடன் காணாமல் போய்விட்டார்.

என்னுடைய தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் திருச்செந்தூருக்கு அவருடன் சென்றுவிட்டேன். பின்னர் 13.02.2019 ம் தேதி மேற்படி ஆஜர் எதிரி மீது புகார் அளித்தேன்.

தற்போது என் முன் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் போலிசார் நகையினை கண்டுபிடித்ததன் அறிவுறுத்தலின் பேரில் மேற்படி நகை உருக்கப்பட்டிருந்த கட்டியாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுகொண்டேன்.

தற்போது என் முன் காட்டப்படும் தங்க நகை கட்டி தான் நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்து பெற்று சென்றதாகவும், மேற்படி புகைப்படம் **அ.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து பெற்று சென்ற தங்க கட்டியை தற்போது கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. அதை எனது சகோதரி முத்துலட்சுமிக்கு தங்க கட்டியை கொடுத்துவிட்டேன். மேற்படி எனது சகோதரி மதுரையில் உள்ளார்.

நீதிமன்றத்தில் மேற்படி தங்க கட்டியை நான் திருப்பி தருவதாக தான் பெற்று சென்றேன் என்றால் சரிதான். மேற்படி காணாமல் போன 16 பவுன் எனது தாயாருக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

மேற்படி 16 பவுன் நகையினை என் தாயார் நீதிமன்றத்தில் வந்து பெற்று செல்லவில்லை என்றால் சரிதான். அவர் உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் உள்ளார். எனது தாயாரிடம் அவரது நகையினை நீதிமன்றத்தில் பெற்று வர கடிதம் ஏதேனும் பெற்று வந்தேனா என்றால் எனது தாயாருக்கு எழுத வராது.

காணாமல்போன நகை எனது தாயாருடையது என்பதை நிருபணம் செய்ய இரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தங்கக் கட்டிக்கும் காணாமல் போன செயினுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

தங்க செயின் காணாமல் போன விவரம் எனக்கு எப்போது தெரிந்தது என்றால் 19ம் தேதி தெரியும். எனது தாயாரை ஊருக்கு அழைத்து செல்வதற்கு முன்னரே நகை காணாமல் போன விவரம் தெரியும் என்றால் சரிதான். எத்தனை நகைகள் காணாமல் போனது என்றால் எனது தாயாரின் தங்க சங்கிலி மட்டும் தான் காணாமல் போனது.

எனது தாயாருக்கு துாக்க மாத்திரை கலந்து கொடுத்த விவரம் எவ்வாறு தெரியும் என்றால் அடுத்த நாள் மர தச்சு வேலை செய்பவர் வந்து மாத்திரையின் அட்டையினை பார்த்து கூறிய பின்பு தான் தெரியும். பின்னிட்டு எவ்வளவு நான் கழித்து நான் புகார் கொடுத்தேன் என்றால் பிப்ரவரி மாதம் 19ம் தேதி புகார் அளித்தேன்.

நான் புகார் கொடுத்தே அன்றே எதிரி காவல்நிலையத்தில் இல்லை. எனது வீட்டில் வேலை செய்த நபரை எனக்கு அடையாளம் தெரியாது என்றால் அவர் ஒரு நாள் தான் வீட்டில் வேலை செய்தார். அதனால் எனக்கு சரிவர அடையாளம் தெரியவில்லை. நான் புகார் அளிக்கும்போது எதிரியின் ஆதார் அட்டையினை காவல்நிலையத்தில் கொடுத்தேன்.

எதிரியின் கணவரை கைது செய்த விவரத்தினை தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். பின்னர் உக்கடத்தில் இருந்து எதிரியை கைது செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியை காவல்நிலையம் கொண்ட வந்து, அடையாளம் காண்பித்து, என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான்.

அப்போது காவல்நிலையத்தில் ஒரு தங்க கட்டியை காண்பித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தங்க கட்டியை தான் நீதிமன்றத்தில் இருந்து பெற்று சென்றேன் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும்,

மேற்படி நகை எனக்கு சொந்தமானது இல்லை என்றாலும், மேற்படி நகையினை திரும்ப பெறுவதற்கு நான் தகுதி அற்றவர் என்றாலும், வயதான என் தாயார் எங்கேயோ வைத்ததை சரிவர தேடாமல் எதிரி மீது பொய்யாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றாலும், அதனால் தான் ஒரு மாதம் கால தாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த புகாரினை சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் கொடுக்கவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் போலிசார் எழுதி வைத்ததில் நான் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் தான் எனது கைப்பட எழுதி கொடுத்தேன்.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 322/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஷோபா |
| Father's Name | – | க/பெ. ராஜேஷ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 21st June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மகாலிங்கபுரத்தில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவராவார். ஆஜர் எதிரி தெரியும். எங்கள் வீட்டிற்கு வேலைக்கு வந்தார். கடந்த 5 வருடங்களுக்கு முன்னால் ஜனவரி மாதம் 7ம் தேதி ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் என்னுடைய மாமியார் புஷ்பத்தினை கவனித்து கொள்வதற்காக வேலைக்கு சேர்ந்தார்.

பின்னர் ஜனவரி மாதம் 9ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் என் மாமியார் அறைக்குள் சென்று பார்த்து, ஆஜர் எதிரியை காணவில்லையே என்று என்னவென்று கேட்டேன். அதற்கு என் மாமியார் தான் வழக்கமாக படுக்கும்போது, 16 பவுன் தங்க சங்கிலியை தன்னுடைய தலையணைக்கு கீழே வைத்துவிட்டு தான் தூங்குவேன் என்றும், காலையில் தங்க செயினையும் காணவில்லை, மேற்படி ஆஜர் எதிரியையும் காணவில்லை என்று தெரிவித்தார்.

நான் என் கணவருக்கு மேற்படி தகவலை தெரிவித்தேன். பின்னர் பக்கத்தில் விசாரித்தோம். மேற்படி ஆஜர் எதிரியை வேலைக்கு அமர்த்திய தாய் ஏஜென்சீயில் விசாரித்து பார்த்தோம். பின்னர் என் மாமியார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தததால் எங்கள் சொந்த ஊர் திருச்செந்துாருக்கு சென்றுவிட்டோம்.

பின்னர் என் மாமியாரின் உடல்நிலை சீரானததால் என் கணவர் மீண்டும் பொள்ளாச்சி திரும்பி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் வந்து என்னை விசாரித்தனர். காவல்நிலையத்தில் திரும்ப அழைத்து நகை கிடைத்து விட்டதாக தகவல் கூறினார்கள்.

பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்து தங்க நகை கட்டியினை என் கணவர் பெற்றுக்கொண்டார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பார்க்கும்போது என் மாமியார் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் மாமியார் சொன்னவுடன் நான் என் கணவருக்கு தகவல் சொன்னவுடன் அன்று காலையிலேயே என் கணவர் வந்துவிட்டார் என்றால் சரிதான்.

எனது வீட்டுக்காரர் எப்போது போலிசாருக்கு தகவல் சொன்னார் என்றால் முதலில் அக்கம் பக்கத்தில் கூறி தேடி பார்த்தோம். பின்பு தாய் ஏஜென்சீக்கு தகவல் கொடுத்தோம். பின்பு என் மாமியாரை அழைத்து கொண்டு திருச்செந்தூருக்கு சென்றுவிட்டோம். பிறகு ஒரு மாதம் கழித்து தான் போலிசாரிடம் என் கணவர் புகார் அளித்தார்.

என் கணவர் ஒரு மாதம் வரை பொள்ளாச்சிக்கு வரவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் நான், எனது மாமியார், எனது மகன்கள் இருவர், என் கணவர் மற்றும் எதிரி

இருந்தோம். எங்கள் வீட்டின் மேல் மாடியில் எனது கணவரின் அண்ணன் குடும்பம் உள்ளது.

ஆஜர் எதிரியை பிடித்த பின்பு நகைகள் கிடைத்துவிட்டதாக போலிசார் தகவல் கூறினார்கள் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்று நகையினை பார்த்தேனா என்றால் நான் ஆஜர் எதிரியை மட்டும் தான் பார்த்தேன். இரவு நேரம் என்பதால் போலிசார் என்னை வீட்டிற்கு செல்ல சொல்லி விட்டார்கள்.

போலிசார் நகையினை கொடுக்கவில்லை. ஒரு பென்சில் மாதிரியான தங்க கட்டியை கொடுத்தார்கள். காணாமல் போன நகை எனது மாமியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். தற்போது அந்த நகை என் மாமியார் வசம் தான் உள்ளது என்றால் சரிதான்.

போலிசார் என்னை வீட்டில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் நகையினை வீட்டிற்குள் வைத்துவிட்டு, பொய்யாக எனது கணவர் புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.